**றம்புக்கன பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூலை 31 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து றம்புக்கன பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 75,475 பெறுமதியான 02 வாகனங்கள், மோட்டார் வாகனமும் வண்டியும் கணக்கிலும், மூலதனத்திற்கான வருமான பங்களிப்புக் கணக்கிலும் கணக்கீடு செய்யப்படாமை முன்னைய ஆண்டின் அறிக்கை மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நூலகப் புத்தகங்களைக் கொண்வனவு செய்த போது மூன்று நிறுவனங்களிலிருந்து கிடைத்த ரூபா 45,989 கழிவு, கிடைத்த கழிவு, செலவினம், நூலகப் புத்தகங்கள் மற்றும் மூலதனத்திற்கான வருமானப் பங்களிப்புக் கணக்குகளில் அப்பெறுமதி குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மருந்து இருப்புக்கள் களஞ்சியத்திலிருந்து விநியோகிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் செலவினமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் செலவினமாக பதிவழிக்கப்பட்டமையின் காரணமாக செலவினம் ரூபா 656,243 தொகை அதிகரித்தும் இறுதியிருப்பு மற்றும் ஆண்டின் மிகை என்பன அப்பெறுமானத்தால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட சபைக்குரிய 02 ஏக்கர் 02 றூட் 9.45 பேர்ச் அளவான 06 காணிக் கூறுகளின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 23,746,095 தொகையான மாகாண சபை நிதிஏற்பாட்டின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்டு 2014 செப்தெம்பர் மாதம் சபைக்குக் கையளிக்கப்பட்ட றம்புக்கன வாராந்த சந்தை கணக்குகளுக்குக் கொண்டு

வரப்படாமையின் காரணமாக காணியும் கட்டிடமும் மற்றும் மூலதனத்திற்கான வருமான பங்களிப்புக் கணக்குகள் அப்பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து மூன்று செயற்திட்டங்களுக்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறப்பட்டிருந்த கடன் அந்த நிதியத்தை மேவுகை செய்யும் பட்டோலையின் பிரகாரம் ரூபா 19,835,052 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 5,830,064 ஆனமையால் செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 14,004,988 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) காணி மற்றும் கட்டிடங்களைக் கணக்கு வைக்கும் போது சொத்துக்கின் பெறுமதி இரட்டைக் கணப்பீடு செய்யப்பட்டமையின் காரணமாக காணியும் கட்டிடமும் மற்றும் மூலதனத்திற்கு வருமானப் பங்களிப்புக் கணக்குகளின் பெறுமதி ரூபா 80,146,875 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

07 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 29,518,002 ஆக இருந்ததுடன் அதற்குரிய பட்டோலைகள் / அறிக்கைகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 35,136,516 ஆனமையால் ரூபா 5,618,514 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 01 வருடத்தை விஞ்சிய பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 19,927,198 ஆகும்.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 01 வருடத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 6,420,009 ஆகும்.

## 1.4 இனங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | | | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| | (i) | நிதிப்பிரமாணம் 137 | 293,345 | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அங்கீகரிக்கப்படாமல் தினனகந்த வீதியில் பக்கச் சுவர் மற்றும் வீதிக்கு கொங்கிறீட் இடுவதற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| | (ii) | நிதிப்பிரமாணம் 138 | 4,974,042 | உறுதிச்சீட்டுக்கள் உறுதிப்படுத்தப்படாமல் 2017 மார்ச் மாதத்தில் 23 சந்தர்ப்பங்களில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| | (iii) | நிதிப்பிரமாணம் 371(இ) | 144,000 | உரிய பணி நிறைவு பெற்றதும் உடனடியாக அல்லது அவ்வாறில்லையாயின் ஒருவாரத்தை விஞ்சாது பட்டியல்கள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 2017 ஆம் ஆண்டில் 11 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட முற்பணத்தைத் தீர்க்கும் போது 08 தினம் முதல் 52 நாட்கள் வரை தாமதம் காணப்பட்டது. |
| | (iv) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | 113,666 | விநியோகிக்கப்பட்டிருந்த போதும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய 67 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (v) | நிதிப்பிரமாணம் 571 | 3,856,990 | 2006 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரியதாக காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (vi) | நிதிப்பிரமாணம் 1645(அ) | - | முறையாகவும், சரியாகவும் மற்றும் நாளதுவரையாகவும் சம்பவத் திரட்டுப் புத்தகம் பேணப்பட வேண்டியிருந்த போதிலும், சபையின் பொறுப்பில் பேணப்பட்ட 11 வாகனங்களின் சம்பவத்திரட்டுப் புத்தகங்களைப் பேணிச் செல்வதில் குறைபாடுகள் காணப்பட்டன. |

| | | | |
|---|---|---|---|
| (vii) | நிதிப்பிரமாணம் 1646 | - | நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த பொழிப்பு என்பன அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 05 வாகனங்களின் ஓட்ட அட்டவணை சமர்ப்பித்தல் தாமதமாக இருந்தது. |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | - | சபைக்குரிய 17 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் பரிசோதனை செய்யப்படவில்லை. |
| (இ) | 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | 152,696 | இடர் கடன் மீதி ரூபா 250,000 இனை விஞ்சி மூன்று உத்தியோகத்தர்களுக்கு இடர்கடன் வழங்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 103,452,041 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 20,595,422 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 5,836,286 | 21,283,524 | 5,956,228 | 1,422,307 | 5,939,031 | 5,739,325 | 3,230,867 | 1,970,837 |
| வாடகை | 9,382,345 | 10,007,368 | 9,891,842 | 728,303 | 6,939,435 | 8,189,093 | 7,928,263 | 672,484 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 3,787,641 | 3,971,182 | 3,966,152 | 5,030 | 5,783,750 | 3,572,821 | 5,724,321 | - |
| ஏனைய வருமானம் | 6,295,500 | 89,661,332 | 89,661,332 | - | 5,505,500 | 7,935,484 | 7,935,484 | - |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பீடு செய்த போது வீத வரியும், வரியும் வருமானம், வாடகை வருமானம், ஆனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் மற்றும் ஏனைய வருமானம் முறையே 02 சதவீதம், 05 சதவீதம், 05 சதவீதம் மற்றும் 1,324 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

பிரதேச சபை அதிகாரப்பிரதேசத்தில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி ரூபா 1,299,636 ஆக இருந்ததுடன் வருடமொன்றிற்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக இருந்த ரூபா 934,880 தொகையான ஆதனவரியை அறவிடுதல் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 ஏனைய வருமானம்

**(அ) ஹோட்டல் அனுமதிப்பத்திரக் கட்டணம்**

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் பதிவு செய்துள்ள ஹோட்டல்கள், சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் தங்குமிடங்கள் என்பவற்றிலிருந்து அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடும் போது, அந்த நிறுவனங்களின் வருடாந்த புரள்வில் 1 சதவீதம் வரையிலான தொகையொன்று கட்டணமாக அறவிட வேண்டியிருந்த போதிலும், இனங்காணப்பட்ட சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் 03 தங்குமிடங்களிலிருந்து அவ்வாறு கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) அறிவித்தல் பதாதைக் கட்டணம்**

சபை அதிகாரப்பிரதேசத்தில் விளம்பர அறிவித்தல் காட்சிப்படுத்தல்களுக்காக எழுத்துமூல அனுமதிப்பத்திரத்தின் அடிப்படையில் அங்கீகாரம் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான அனுமதியின்றி காட்சிப்படுத்தப்பட்ட 12 விளம்பர அறிவித்தல் பதாதைகளில் இருந்து ரூபா 90,750 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத்தரப்பினரிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 1,004,957 தொகையும், முத்திரைக் கட்டணம் ரூபா 29,199,182 தொகையும் காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) கைவிடப்பட்ட இலக்குகள்**

2013 ஆம் ஆண்டில் சிறிய நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மாகாண சபை நிதிஏற்பாட்டின் அடிப்படையில் ரூபா 23,746,095 கிரயத்தைச் செய்து 2014 செப்தெம்பர் 24 ஆந் திகதி சபைக்குக் கையளிக்கப்பட்ட றம்புக்கனை வாராந்த சந்தை 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

பிரதேச சபை அதிகாரப்பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற கழிவுப் பொருட்களிலிருந்து கூட்டுப்பசளை உற்பத்திக்காக ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டம், வனப் பாதுகாப்புத் திணைக்களத்திலிருந்து வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்த காணியில் நடாத்திச் செல்லப்பட்டதுடன் அந்த பணிகளுக்காக நிரந்தமாக காணியொன்றை தெரிவு செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறே கூட்டுப்பசளை உற்பத்தியின் பின்னர் எஞ்சுகின்ற கழிவுகளை அகற்றுதலும் அக்காணியிலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை தெளிவுபடுத்தாமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகளாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப்பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கான நீண்ட காலத்திட்டம் என்பன 2018 மே வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்**

ரூபா 15,632 கிரயமான இரண்டு கொங்கிறீட் ஹியூம் குழாய்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு அல்லது பொருத்தமானவற்றைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2005 ஆம் ஆண்டிற்கும் 2014 ஆம் ஆண்டிற்கும் இடையிலான காலத்தில் ஊழியர் கடனைப் பெற்றுக்கொண்டு இடமாற்றலாகிச் சென்ற 07 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய மீதி ரூபா 151,300 இனைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபரகமுவ மாகாண சபையின் பிரதம அமைச்சுச் செயலாளரின் 2010 நவம்பர் 16 ஆந் திகதிய சீஎம்/ஏடீ/20/03 ஆம் இலக்க சுற்றறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட பிரகாரம் கனிஷ்ட ஊழியர்களாக நியமனம் வழங்கப்பட்டுள்ள பதவியிலேயே சேவையில் ஈடுபட வேண்டிய போதிலும், சபையின் வேலை / 14 களத் தொழிலாளர்கள் மற்றும் 06 சுகாதாரத் தொழிலாளர்கள் வேறு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## 3.4 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 ஆம் ஆண்டிற்காக 2016 ஆம் ஆண்டின் போது வியாபார நிறுவனங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்ட போதிலும், அந்த மெய்மையாய்வை அடிப்படையாகக் கொண்டு சகல நிறுவனங்களும் வரி செலுத்தியமை உறுதிப்படுத்தப்படவில்லை.

(ஆ) வியாபார வரிப் பதிவேட்டின் பிரகாரம் வாகன பழுதுபார்த்தல் இடங்கள் 8 உம், கொங்கிறீட் வேலைத் தளங்கள் 09 உம், 03 மர ஆலைகள், 05 நெல் ஆலைகள் மற்றும் 02 தச்சு வேலை தளங்களுமாக 27 வியாபார நிறுவனங்களினால் வியாபார வரி மற்றும் சந்தை அனுமதிப்பத்திரம் பெறப்படாமையின் அடிப்படையில் சபைக்கு 108,000 வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(இ) சபரகமுவ மாகாண சபையின் பிரதம அமைச்சின் நிதிஏற்பாட்டின் அடிப்படையில் 2017 ஆம் ஆண்டின் உள்ளூராட்சி வீதி அபிவிருத்திக்குரிய பெறுமதி ரூபா 4,327,550 தொகையான 07 வேலைகள் நிறைவேற்றப்பட்டாதிருந்ததுடன் அப்பணம் பொதுமக்கள் நலன்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கடைகளை வாடகைக்கு வழங்குதல் தொடர்பான பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) றம்புக்கன புதிய பொதுச் சந்தைத் தொகுதி 2017 செப்தெம்பர் 25 ஆந் திகதி திறக்கப்பட்டிருந்த போதிலும், 2018 ஏப்ரல் 25 ஆந் திகதி வரையிலும் 17 கடைகளில் மாத்திரம் சந்தை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அந்த கடைகளுக்காக வாடகை அறவிடப்படாதிருந்ததுடன் கடை வாடகை தொடர்பாக கடை உரிமையாளர்களுடன் முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ii) ஒரே தடவையில் சேரும் பணத்தில் 60 சதவீதப் படி பெறப்பட்டிருந்த 18 கடைகளில் அந்த வேலை பூர்த்தி செய்யப்படாமையினால் 2018 மார்ச் வரையிலும் எந்தவித உடன்படிக்கையும் கைச்சாத்திட்டிருக்கவில்லை.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

உள்ளூராட்சி அமைச்சிலிருந்தும், சபரகமுவ மாகாண சபையிலிருந்தும் கிடைத்த ரூபா 57,059,225 பெறுமதியான 24 வாகனங்களை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக பாதீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடுகளில் 20 செலவின விடயங்களின் கூட்டுமொத்தமான ரூபா 3,080,000 தொகையான நிதிஏற்பாடு 100 சதவீதமும் மற்றும் 04 செலவின விடயங்களின் கூட்டுமொத்தமாக ரூபா 1,225,000 தொகையான நிதிஏற்பாடுகளிலிருந்து 85 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான கூட்டுமொத்தமாக ரூபா 4,305,000 தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

சபையின் நடவடிக்கைகள் தொடர்பாக போதியளவான உள்ளகக் கணக்காய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | (i) முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட தவறுகளை சரி செய்யாமை |
| | (ii) நாட்குறிப்புப் பதிவுகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட தெளிவுக் குறிப்புக்கள் விளக்கமாக இன்மை |
| | (iii) பட்டோலைகள் கணக்குகளுடன் இணங்காமை |
| (ஆ) வருமான நிர்வாகம் | (i) நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்காமை. |
| | (ii) வியாபார மற்றும் கைத்தொழில் தொடர்பாக பதிவேடு பேணப்படாமை |
| (இ) பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) மதிப்பிடப்பட்ட நிதிஏற்பாடுகளில் கவனத்தில் கொள்ளக்கூடிய சேமிப்பு காணப்பட்டமை |
| | (ii) மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் அறவிடப்படாமை |
| (ஈ) சொத்துக் கட்டுப்பாடு | (i) மதிப்பீடு செய்தல் நாளதுவரையாக இடம்பெறாமை. |
| | (ii) எந்தவொரு நிதிசார் பெறுமதியை உள்ளடக்காத காணி கட்டிடம் காணப்பட்டமை |
| | (iii) நிலையான சொத்துப் பதிவேடு துருப்பிடித்திருந்ததுடன் பக்கங்கள் கழன்று மற்றும் நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்காமை. |